# குடியிருப்புவாசிகளின் உரிமைகளுக்கான மசோதா

**குடியிருப்புவாசிகளின் உரிமைகளுக்கான மசோதா**

**3** (1) நீண்டகால பரமரிப்பகத்திற்கான உரிமம் கொண்டிருப்போர் பின்வரும் உரிமைகள் முழுமையாக மதிக்கப்படுவதையும் போற்றப்படுவதையும் உறுதி செய்ய வேண்டியது:

## மதிப்புடன் நடத்தப்படுவதற்கான உரிமை

1. ஒவ்வொரு குடியிருப்புவாசியும் அவரவரின் இனம், வம்சாவளி, பிறப்பிடம், நிறம், இன மூலம், குடியுரிமை, மதம், பாலினம், பாலியல் நோக்குநிலை, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு, வயது, திருமண நிலை, குடும்ப நிலை அல்லது மாற்றுத்திறன் ஆகியவை ஒரு பொருட்டில்லாமல்  உள்ளார்ந்த கண்ணியம், மதிப்பு மற்றும் தனித்தன்மையை முழுமையாக அங்கீகரிக்கும் விதத்தில்,  அனுசரணையுடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதற்கு உரிமை கொண்டிருக்கின்றனர்
2. ஒவ்வொரு குடியிருப்புவாசியும் அவரவரின் வாழ்க்கைப்பாவனை மற்றும் அதற்கான தெரிவுகளைக் கொண்டிருக்க உரிமை கொண்டிருக்கிறார்கள்.
3. ஒவ்வொரு குடியிருப்புவாசியும் முடிவு மேற்கொள்ளுவதில் மதிப்புக் கொடுக்கப்படுவதற்கு அவரவரின் பங்கேற்பினைப் கொண்டிருக்க உரிமை கொண்டிருக்கிறார்கள்

## துர்ப்பிரயோகம் மற்றும் உதாசீனம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கான உரிமை

4. துர்ப்பிரயோகம் மற்றும் உதாசீனம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்கான உரிமையை ஒவ்வொரு குடியிருப்புவாசியும் கொண்டிருக்கிறார்கள்
5. உரிமம் கொண்டிருப்பவர் மற்றும் பணியாளர் ஆகியோரால் உதாசீனம் செய்யப்படுவதிலிருந்து விடுபடுவதற்கான உரிமையை ஒவ்வொரு குடியிருப்புவாசியும் கொண்டிருக்கிறார்.

இயன்றவரைக்கும் நல்ல தரமான வாழ்க்கை வாழும் உரிமை

6. ஒவ்வொரு குடியிருப்பாளரும் தன்னம்பிக்கையுடன் தகவல்தொடர்பு கொள்ளவும், அவரவர் விருப்பப்படி பார்வையாளர்களை வரவேற்கவும், எந்தவொரு நபருடனும் குறுக்கீடு இல்லாமல் தனிப்பட்ட முறையில் ஆலோசனை செய்யவும் உரிமை கொண்டிருக்கிறார்.
7. நட்புறவு மற்றும் குடும்பஉறவுகளை உருவாக்கிக் கொள்ளவும் நீண்ட கால பராமரிப்பகத்தில் வாழும் வாழ்க்கையில் பங்கேற்கவும் ஒவ்வொரு குடியிருப்பாளரும் உரிமை கொண்டிருக்கிறார்.
8. தகுந்த தங்குமிடம் இருந்தால், ஒவ்வொரு குடியிருப்பாளரும் அவரவரின் பரஸ்பர விருப்பத்தின்படி மற்றொரு குடியிருப்பாளருடன் ஒரு அறையைப் பகிர்ந்து கொள்ள உரிமை கொண்டிருக்கிறார்.
9. அந்தரங்கத்தை உறுதி செய்யும் விதமான அறையில் தங்கள் துணைவர்/துணைவி அல்லது மற்றொரு நபருடன் தனிப்பட்ட முறையில் சந்திக்க ஒவ்வொரு குடியிருப்பாளரும் உரிமை கொண்டிருக்கிறார்.
10. ஒவ்வொரு குடியிருப்புவசியும் அவரவர் சமூக, கலாச்சார, மத, ஆன்மீக மற்றும் பிற விருப்பங்களைக் கடைப்பிடிக்கவும், தங்களின் திறனை வளர்த்துக் கொள்ளவும், இந்த விருப்பங்களைத் தொடர, உரிமதாரரிடமிருந்து நியாயமான உதவியைப் பெறவும்,

---

ஆதாரம்: ஒன்ட்டாரியோ மாகாண அரசாங்கம், நீண்டகால பராமரிப்பகம் நிறுவுதல் சட்டம், 2021 மதிப்பீட்டுத் தேதி 2022-04-25 | https://www.ontario.ca/laws/statute/21f39#BK5 | பக்கங்கள்**2** இல் **7**

தங்களின் திறனை வளர்த்துக் கொள்ளவும் உரிமை உண்டு.

11. பாதுகாப்பான மற்றும் தூய்மையான சுற்றுச்சூழலில் வாழும் உரிமையை ஒவ்வொரு குடியிருப்புவாசியும் கொண்டிருக்கிறார்.

12. உடல் அமைப்பு சாத்தியமற்றதாக்காத வரையில், வெளிப்புறச் செயல்பாடுகளை அனுபவிப்பதற்காக பாதுகாக்கப்பட்ட திறந்தவெளிப் பகுதிகளுக்கு அணுகல் பெற ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

13. பாதுகாப்புத் தேவைகள் மற்றும் பிற குடியிருப்பாளர்களின் உரிமைகளுக்கு உட்பட்டு தனிநபருக்கான உடைமைகள், படங்கள் மற்றும் அலங்காரப் பொருட்களைத் தங்கள் அறையில் வைத்திருக்கவும் காட்சிப்படுத்தவும் ஒவ்வொரு குடியிருப்பாளரும் உரிமை கொண்டிருக்கிறார்.

14. நிதிரீதியான காரியங்களைக் கையாளவதற்கான சட்டப்படியான திறமை கொண்டிருப்பாரேயானால் அப்படியான அவரவர் காரியங்களை மேலாளுமை செய்ய ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

15. குடியுரிமை கொண்டவருக்கான உரிமைகளைப் பிரயோகிக்க ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

## நல்ல தரமான பராமரிப்பு மற்றும் சுய-தீர்மானிப்புக்கான உரிமை

16. முறையான தங்குமிடம், ஊட்டச்சத்து, அக்கறை மற்றும் அவரவர் தேவைகளுக்கு ஒத்துப்போகும் வகையிலான சேவைகளைப் பெற ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

17. யார் தங்களுக்கு பொறுப்பேற்கிறார் மற்றும் தங்களுக்கான நேரடி பராமரிப்பினை யார் வழங்குகிறார் ஆகிய இரு விஷயங்களையும் பற்றி தங்களுக்கு அறிவிக்கப்பட ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

18. தங்களின் தேவைகள் மீது அக்கறை கொண்டபடி தங்களை நடத்துவதில் அந்தரங்கத்தைப் பேணுவதற்கு ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

19. ஒவ்வொரு குடியிருப்புவாசியும் இந்த உரிமைகளைக் கொண்டிருக்கிறார்,

   i. தங்களின் பராமரிப்புக்கான திட்டம், உருவாக்கம், நடைமுறைப்படுத்தல், பரிசீலனை மற்றும் திருத்தம் ஆகியவற்றில் முழுமையாக பங்கேற்க,

   ii. சட்டப்படி அவரவர் ஒப்புதல் தேவைப்படுகிற வகையிலான எந்தவொரு சிகிச்சை, கவனிப்பு அல்லது சேவைகளுக்கு ஒப்புதல் வழங்க அல்லது மறுக்க, மற்றும் ஒப்புதல் வழங்குவது அல்லது மறுப்பது ஆகியவற்றின் விளைவுகள் பற்றி தெரிவிக்கப்பட,

   iii. தங்களின் பராமரிப்பு தொடர்பான எந்தவொரு அம்சம் தொடர்பான எந்தவொரு முடிவையும் எடுப்பதில் முழுமையாக பங்கேற்கவும், நீண்ட கால பராமரிப்பு இல்லத்திற்கு தங்களின் உள்சேர்ப்பு, வெளியேற்றம் அல்லது அல்லது இடமாற்றம் மற்றும் அவை தொடர்பான விஷயங்களில் ஏதேனும் ஒரு சுயாதீனமான கருத்தைப் பெறுவதற்கு, மற்றும்

   iv. *தனிநபர் சுகாதாரத் தகவல் பாதுகாப்புச் சட்டம், 2004* இன் அர்த்தத்திற்கு உட்பட்ட வகையில் தங்களின் தனி நபர் சுகாதாரத் தகவல்களை அந்தச் சட்டத்திற்கு ஏற்ப ரகசியமாக வைக்கப்படுவதற்கு, மற்றும் அந்தச் சட்டத்திற்கு ஏற்ப தங்கள்

பராமரிப்புக்கான திட்டம் உள்பட தங்களின் தனிநபர் சுகாதாரத் தகவல்கள் கொண்ட பதிவேடுகளின் அணுகலைப் பெறுவதற்கு.

20. தங்களின் உடல்ரீதியான, மனரீதியான, சமூக மற்றும் உணர்ச்சிரீதியான நல்வாழ்வு மற்றும் தங்களின் நல்ல வாழ்க்கைத் தரம் மற்றும் தங்களின் தேவைகளுக்கு ஆதரவாக ஒரு பராமரிப்பாளர் அல்லது பிற நபரைத் தொடர்புகொள்வதில் உதவுவதற்காக தங்களின் பராமரிப்பாளர்களிடமிருந்து தொடர்ச்சியான மற்றும் பாதுகாப்பான ஆதரவைப் பெற ஒவ்வொரு குடியிருப்புவாசிக்கும்உரிமை உண்டு.
21. காப்பக உரிமம் பெற்றவர் அல்லது காப்பக ஊழியர்களுடனான எந்தவொரு சந்திப்பிலும் கலந்துகொள்வதற்காக, எந்தவொரு நண்பர், குடும்ப உறுப்பினர், பராமரிப்பாளர் அல்லது குடியிருப்புவாசிக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிற நபர்களைக் கொண்டிருக்க, ஒவ்வொரு குடியிருப்புவாசிக்கும் உரிமை உண்டு.
22. குடியிருப்புவாசியின் எந்தவொரு இடமாற்றம் அல்லது அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது தொடர்பான தகவலைப் பெறுவதற்கான ஒரு நபரை நியமிக்கவும் அந்த நபர் அப்படியான தகவல்களைப் பெறச்செய்யப்படவும் ஒவ்வொரு குடியிருப்புவாசிக்கும் உரிமை உண்டு.
23. முடிந்தவரை சார்பினை அதிகரிக்கச்செய்யும் ஒரு மறுசீரமைப்பு பராமரிப்பு தத்துவத்தின் அடிப்படையில் அந்த சுயசார்பிற்கான கவனிப்பு மற்றும் உதவியைப் பெற ஒவ்வொரு குடியிருப்புவாசிக்கும்உரிமை உண்டு.
24. இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வரம்புக்குட்பட்ட சூழ்நிலைகளைத் தவிர மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தேவைகளுக்கு உட்பட்டு, தங்களைக் கட்டுப்படுத்தப்படாமல் இருக்க ஒவ்வொரு குடியிருப்புவாசிக்கும் உரிமை உண்டு.

**குறிப்பு: லெப்டினன்ட் கவர்னரின் பிரகடனத்தின் மூலம் குறிப்பிடப்படும் நாளில், இந்தச் சட்டத்தின் துணைப்பிரிவு 3 (1) இன் பத்தி 24, இன் படி, "தடைசெய்யப்பட்ட" என்பது நீக்கப்பட்டு "தடைசெய்யப்பட்ட அல்லது கட்டுக்குள் வைக்கப்பட்ட" என மாற்றியமைக்கப்படுகிறது. (பார்க்கவும்: 2021, c. 39, Sched. 1, s. 203 (3))**

25. நிவாரணமளிக்கும் வகையிலான சிகிச்சை தத்துவத்தின் அடிப்படையில் பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்கான உரிமையை ஒவ்வொரு குடியிருப்புவாசியும் கொண்டிருக்கிறார்.

26. இறக்கும் தருவாயில் உள்ள அல்லது தீராத நோய் கொண்ட ஒவ்வொரு குடியிருப்புவாசியும் தம்முடன் தங்களின் குடும்பத்தினர் அல்லது நண்பர் தங்கி இருக்க உரிமை கொண்டிருக்கிறார்.

## தகவல் தெரிவிக்கப்பட, பங்கேற்க மற்றும் புகார் அளிப்பதற்கான உரிமை

27. குடியிருப்புவாசிருக்கு வழங்கப்படும் சேவைகளைப் பாதிக்கும் எந்தவொரு சட்டம், விதி அல்லது கொள்கைகள் பற்றியும் மற்றும் புகார்களைத் தொடங்குவதற்கான நடைமுறைகள் குறித்தும் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்படுவதற்கு ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

28. குடியிருப்புவாசிகளுக்கான குழுவில் பங்கேற்க ஒவ்வொரு குடியிருப்புவாசியும் உரிமை கொண்டிருக்கிறார்.

29. கீழ்க்கண்ட நபர்கள் மற்றும் அமைப்புகளிடம் தங்கள் சார்பாகவோ அல்லது மற்றவர்களின் சார்பாகவோ, தங்களையோ அல்லது வேறு யாரையேனுமோ

குறிவைத்தாலுமே கூட, வற்புறுத்தல், பாகுபாடு அல்லது பழிவாங்கும் பயம் இல்லாமல் மற்றும் குறுக்கீடு இல்லாமல் தங்கள் கவலைகள் பற்றி குரல் எழுப்ப அல்லது கொள்கைகள் மற்றும் சேவைகளில் மாற்றங்களை பரிந்துரைக்க ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும்  உரிமை உண்டு:

i. குடியிருப்புவாசிகள் கொண்ட குழு.

ii. குடும்பத்தினர்களைக் கொண்ட குழு.

iii. உரிமம் பெற்றவர், மற்றும், உரிமம் பெற்றவர் ஒரு பெருநிறுவனமாக இருந்தால் அந்த நிறுவனத்தின் இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள், பகுதி IX இன் கீழாக அங்கீகரிக்கப்பட்ட  காப்பகமாக இருந்தால், அந்தக் காப்பகத்தின் பிரிவு 135 இன் கீழ் காப்பக நிர்வாகக் குழு உறுப்பினர், அல்லது சட்டப்பிரிவு 128 அல்லது 132 இன் கீழ் அந்தக் காப்பகத்திற்கான நிர்வாகக் குழு மன்றம்.

iv. அலுவல் பணியாளர்கள்

v.அரசாங்க அலுவலர்கள்

vi.நீண்டகால பராமரிப்பகத்திற்கு உள்ளாக அல்லது வெளியிலாக இருக்கும் எந்த ஒரு நபரும்.